அறிவியல் மக்களுக்கே

# விஞ்ஞானச் சிறகு

தமிழ்நாடு அறிவியல் இயக்க உறுப்பினர்களுக்கான அறிவியல் மாத இதழ்

VIGNANA SIRAGU June-2020 Rs:3.00

Volume : 19 ISSUE : 04 ஜூன் – 2020 ஆண்டுச் சந்தா ரூ.30 ஆயுள் சந்தா ரூ. 300

# நகர்ப்புற இந்தியர்கள் புலம்பெயர் தொழிலாளர்களை கண்டுகொள்ளவில்லை



**பி. சாய்நாத்.**

புலம்பெயர்ந்த தொழிலாளியைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. திடீரென்று, மில்லியன் கணக்கானவர்களை தெருக்களில் காண்கிறோம். நாம் நமது சேவைகளை இழந்துவிட்டதால் அதை உணர்கிறோம்.

கோவிட் 19 பெருநோய்தொற்று அபாயம் காரணமாக பிறப்பிக்கப்பட்ட நாடு தழுவிய ஊரடங்கின் விளைவாக, சிக்கித் தவிக்கும் புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் அவலங்களை நாள்தோறும் பார்த்து வருகிறோம். ஆனால், அவர்களுடைய அவலங்கள் புதியவை அல்ல; சமகால வரலாற்றில் நாட்டின் பொருளாதாரத்தின் கண்ணுக்கு தெரியாத அம்சமாக இருந்து வரும் ஒரு பிரச்சினை, நகர்ப்புற இந்தியாவின் கவனத்துக்கு வந்துள்ளது.

கிராமப்புற இந்தியாவின் மக்கள் காப்பகம்(PARI) என்ற அமைப்பின் நிறுவனரும் ரமோன் மாகசேசே விருது பெற்ற பத்திரிகையாளருமான பி.சாய்நாத், பல தசாப்தங்களாக புலம்பெயர்ந்தோர் நிலையை எழுதி வருகிறார். இந்த நேர்காணலில், தொழிலாளர்களின் தற்போதைய நிலைமை மற்றும் முன்னோக்கி செல்லக்கூடிய வழி ஆகியவற்றை அவர் விவரிக்கிறார்.

சமீபத்தில், மத்திய பிரதேசத்தை சேர்ந்த 16 தொழிலாளர்கள் தூங்கிக் கொண்டிருந்தபோது, ரயிலில் நசுக்கப்பட்டு கொல்லப் பட்டனர். இறந்த தொழிலாளர்கள் ஏன் ரயில் தண்டவாளத்தில் தூங்கிக் கொண்டிருந்தார்கள் என்பதுதான் நமது முதல் எதிர்வினையாக இருந்தது, அவர்களை வீட்டிற்கு நடந்து செல்லும் நிலைமைக்கு தள்ளியவர்கள் பற்றி ஏன் கேள்வி எழுப்பப்படவில்லை?

எத்தனை ஆங்கில பத்திரிகைகள் ரயிலில் நசுக்கப்பட்ட தொழிலாளர்களின் பெயர்களைக் குறிப்பிட்டன? அவர்களை முகமில்லாமல், பெயரின்றி சொல்ல வேண்டியிருந்தது. இதுதான் ஏழைகள் மீதான நமது அணுகுமுறை. இதுவே ஒரு விமான விபத்தாக இருந்திருந்தால், தகவல்களை வழங்கும் ஹெல்ப்லைன் களையும் சேர்த்தே நாளிதழ்கள் வெளியிட்டிருக்கும். இந்த விபத்தில் 300 பேர் கொல்லப்பட்டிருந்தாலும், அவர்களின் பெயர்கள் செய்தித் தாள்களில் வந்திருக்கும்.

ஆனால், மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த 16 ஏழை எளியவர்கள், அவர்களில் எட்டு பேர் கோண்ட் பழங்குடியினர், அவர்களுக்கு யார் பெயர் தருவார்கள்? வீடு அடைய அவர்கள் அந்த ரயில் பாதைகளில் நடந்து கொண்டிருந்தார்கள். எப்படியாவது ரயில் நிலையத்திலிருந்து ரயில் பிடித்து வீடு போய் சேர்ந்து விடலாம் என அவர்கள் நம்பிக் கொண்டிருந்தார்கள். நடந்த களைப்பில் அவர்கள் ரயில் தடங்களில் தூங்கியிருக்கிறார்கள். அநேகமாக அந்த பாதைகளில் ரயில் வராது என நம்பித்தான் தூங்கியிருக்கிறார்கள்.



**இந்தியா மிகப்பெரிய தொழிலாளர் ஆற்றல் உள்ள நாடு, அரசாங்கங்கள் தொழிலாளர்களுடன் தொடர்புகொள்வது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

1.3 பில்லியன் மனிதர்களைக் கொண்ட ஒரு நாட்டில் அவர்களின் வாழ்க்கையை முடக்குவதற்கு நான்கு மணி நேரம் அவகாசம் மட்டுமே அளித்தோம். முன்னாள் ஆட்சிப்பணி அதிகாரியான எம்.ஜி.தேவாசகாயம், ‘சிறிய காலாட்படை படை நான்கு மணி நேர கால அவகாசம் மட்டுமே தரப்பட்டு, ஒரு பெரிய நடவடிக்கைக்கு தள்ளப்பட்டிருக்கிறது’ என்கிறார்.

புலம்பெயர் தொழிலாளர்களுடன் நாம் உடன்படுகிறோமோ இல்லையோ, வெளியேறுவதற்கான காரணம் முற்றிலும் சரியாகவே இருந்தது. அவர்களுடைய அரசாங்கங்கள், தொழிற்சாலை உரிமையாளர்கள் மற்றும் நம்மைப் போன்ற நடுத்தர வர்க்க ஊழியர்கள் எவ்வளவு நம்பத்தகாதவர்கள், சிந்தனையற்றவர்கள், கொடூரமானவர்கள் என்பதை அவர்கள் அறிவார்கள், ஒவ்வொரு மணிநேரமும் அதை நாம் நிரூபித்துக் கொண்டிருக்கிறோம். அவர்களின் இயக்க சுதந்திரத்தை சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்த முடியும் என நம்புகிறோம்.

நீங்கள் பேரச்சத்தை உருவாக்கியிருக்கிறீர்கள். நெடுஞ்சாலை களில் மில்லியன் கணக்கானவர்களுடன் நாட்டை முழுமையான குழப்பத்திற்கு உள்ளாக்கியிருக்கிறீர்கள். மிக எளிதாக திருமண மண்டபங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் மற்றும் சமூக மையங்களை புலம்பெயர்ந்தோர் மற்றும் வீடற்றோருக்கான தங்குமிட வீடுகளாக மாற்றியிருக்கலாம். வெளிநாட்டிலிருந்து திரும்பும் மக்களுக்கான தனிமைப்படுத்தப்பட்ட மையங்களாக நட்சத்திர ஹோட்டல்களை அறிவித்தோம்.

புலம் பெயர்ந்தோருக்கான ரயில்களை ஏற்பாடு செய்யும்போது, அவர்களிடம் முழு கட்டணம் வசூலிக்கிறோம். பின்னர் ஏசி ரயில்களிலும், ராஜ்தானி வகுப்பு கட்டணத்திலும் ரூ. 4,500 வைத்தோம். அதை மேலும் மோசமாக்கும் வகையில், டிக்கெட்டுகள் அனைத்தையும் ஸ்மார்ட்போன்கள் வைத்திருப்பதாக கருதி ஆன்லைனில் முன்பதிவு செய்யலாம் என்று கூறுகிறீர்கள். அவர்களில் சிலர் அந்த டிக்கெட்டுகளை வாங்குகிறார்கள். ஆனால் கர்நாடகாவில், அடிமைகள் தப்பிக்கிறார்கள் என்று கூறும் பில்டர்களை முதலமைச்சர் சந்திப்பதால் அவற்றையும் ரத்து செய்கிறார்கள். எதிர்பார்த்த அடிமை கிளர்ச்சியைத் தணிப்பதை நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.

நாம் எப்போதும் ஏழைகளுக்கு ஒரு தரத்தையும் மற்றவர்களுக்கு ஒரு தரத்தையும் வைத்திருக்கிறோம். இருப்பினும், நீங்கள் அத்தியாவசிய சேவைகளை பட்டியலிடும்போது, மருத்துவர்களைத்

தவிர, ஏழை மக்கள் மட்டுமே அத்தியாவசியம் என்பதை நீங்கள் கண்டுபிடித்துள்ளீர்கள். பல செவிலியர்கள் நல்ல நிலைமையில் இல்லை. அவர்களைத் தவிர, தூய்மை தொழிலாளர்கள், ஆஷா தொழிலாளர்கள், அங்கன்வாடி தொழிலாளர்கள், மின்சாரத் தொழிலாளர்கள், மின் துறை தொழிலாளர்கள் மற்றும் தொழிற்சாலை தொழிலாளர்கள் உள்ளனர். திடீரென்று இந்த நாட்டிற்கு உயரடுக்கு எவ்வளவு இன்றியமையாதவர்கள் அல்லர் என்பதை நீங்கள் கண்டுபிடித்துள்ளீர்கள்.

**இடம்பெயர்வு பல தசாப்தங்களாக நடந்துள்ளது. ஊரடங்குக்கு முன்பே அவர்களின் நிலை படுமோசமான வகையில் இருந்தது. நம்முடைய புலம்பெயர் தொழிலாளர்களை நாம் பொதுவாக நடத்தும் விதத்தை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?**

பல வகையான குடியேறிகள் உள்ளனர். ஆனால் குடியேற்றத்தின் வர்க்க வேறுபாடுகளை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நான் சென்னையில் பிறந்தேன். உயர் கல்வியை டெல்லியில் முடித்தேன், அங்கு நான் நான்கு ஆண்டுகள் வாழ்ந்தேன். பின்னர் நான் மும்பைக்கு குடிபெயர்ந்தேன், நான் இங்கு 36 ஆண்டுகளாக வசித்து வருகிறேன். நான் செய்த ஒவ்வொரு இட மாற்றமும் எனக்கு பயனளித்தது. ஏனெனில் நான் ஒரு குறிப்பிட்ட வகுப்பு மற்றும் சாதியைச் சேர்ந்தவன். எனக்கு சமூக மூலதனம் மற்றும் வலைபின்னல்கள் உள்ளன.

நீண்ட காலமாக குடியேறிகள் உள்ளனர், A இலிருந்து B க்கு வெளியேறி B இல் நிரந்தரமாக இருப்பவர்கள்.

பின்னர் பருவகால குடியேறிகள் உள்ளனர். உதாரணமாக, மகாராஷ்டிராவில் உள்ள கரும்புத் தோட்டத் தொழிலாளர்கள் ஐந்து மாதங்களுக்கு கர்நாடகாவுக்கு குடிபெயர்கிறார்கள், மிகவும் குறிப்பிடத்தக்க வகையில் நேர்மாறாக அங்கு வேலைசெய்து தங்கள் கிராமங்களுக்கு மீண்டும் செல்கிறார்கள். காலஹந்தி குடியேறிகள் சுற்றுலாப் பருவத்தில் ராய்ப்பூருக்குச் சென்று ரிக்ஷாக்களை இழுக்கும் பணியைச் செய்கின்றனர். ஒடிசாவின் கோராபுட்டிலிருந்து ஆந்திராவின் விஜயநகரத்தின் செங்கல் சூளைகளுக்கு சில மாதங்கள் செல்வோர் உள்ளனர்.

மற்ற குழுக்களும் உள்ளன ஆனால் நாம் மிகவும் அக்கறை கொள்ள வேண்டிய நபர்கள் தான்தோன்றி குடியேறிய தொழிலாளர்கள் என்று அழைக்கப்படுபவர்களே. இப்படிப்பட்ட குடியேறிகளுக்கு இறுதி இலக்கு குறித்த தெளிவான யோசனை இல்லை. அவர்கள் ஒரு ஒப்பந்தக்காரருடன் மும்பைக்கு வந்து ஒரு கட்டுமான இடத்தில் 90 நாட்கள் வேலை செய்வார்கள். அந்த காலகட்டத்தின் முடிவில், அவர்களுக்கு எதுவும் இருக்காது. பின்னர் ஒப்பந்தக்காரர் அவர்களை மகாராஷ்டிராவின் வேறு ஏதேனும் ஒரு பகுதியுடன் தொடர்புகொண்டு, அவர்களை அங்கே விடுவார். இது முடிவில்லாமல் இப்படியே தொடர்ந்து கொண்டிருக்கும். செல்கிறது. இது மொத்தமாக, பாதுகாப்பில்லாத, முடிவற்ற ஒரு மோசமான வாழ்க்கை. அப்படியானவர் மில்லியன் கணக்கில் உள்ளனர்.

**புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் நிலை எப்போது மோசமடையத் தொடங்கியது?**

இடம்பெயர்வு ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக நடந்து வருகிறது. ஆனால் அவை கடந்த 28 ஆண்டுகளில் பெரு வெடிப்பாக அமைந்தன. 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு, 2001 மற்றும் 2011 க்கு இடையில், சுதந்திரத்துக்குப் பிறகான வரலாற்றில், இந்தியா மிக அதிக அளவிலான புலம்பெயர்ந்தோரைப் பார்த்துள்ளது.

2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 1921 க்குப் பிறகு முதன்முறையாக நகர்ப்புற இந்தியா அதன் மக்கள் தொகையில் சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை கிராமப்புற இந்தியா அதன் மக்கள்தொகையில் சேர்க்கப்பட்ட மக்களின் எண்ணிக்கையை விட அதிகமாக உள்ளது. நகர்ப்புறங் களில் மக்கள்தொகை விகிதத்தின் வளர்ச்சி மிகவும் சிறியது, ஆனால் நகர்ப்புற இந்தியாவின் மக்கள்தொகையில் இன்னும் அதிகமானவர் களை சேர்க்க வேண்டியுள்ளது.

**2011** மக்கள்தொகை கணக்கெடுப்பின் இந்த உண்மைகளுக்கு முழுமையாக பேசிய தொலைக்காட்சி நிபுணர்களுடன் குழு விவாதம் அல்லது நேர்காணலைத் தேடிப் பாருங்கள். புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் கிராமப்புறத்திலிருந்து நகர்ப்புறம், கிராமப்புறத்திலிருந்து கிராமப்புறம் மற்றும் பலவற்றிற்கு இடம்பெயர்ந்த நிகழ்வின் தீவிரம் குறித்து எத்தனை பேர் விவாதித்தனர்?

**இடம்பெயர்வு பற்றிய எந்தவொரு கலந்துரையாடலும் கிராமப்புற துயரங்கள் இல்லாமல் முழுமையடையாது, அதுதான் குடியேற்றத்தின் மூலத்தில் உள்ளது, இல்லையா?**

நாம் விவசாயத்தை அழித்து ஒழித்தோம்; மில்லியன் கணக்கான வாழ்வாதாரங்கள் சரிந்தன. கிராமப்புறங்களில் உள்ள மற்ற வாழ்வாதாரங்களும் படுமோசமாக உள்ளன. விவசாயத்துக்குப் பிறகு கைத்தறி மற்றும் கைவினைப்பொருட்களும் நாட்டில் மிகப்பெரிய பணி வழங்குபவையாக இருந்தன. படகுகாரர்கள், மீனவர்கள், பனைஏறும் தொழிலாளர்கள், பொம்மை தயாரிப்பாளர்கள், நெசவாளர்கள், சாயம் ஏற்றுபவர்கள்; ஒன்றன் பின் ஒன்றாக, அவை சரிந்து செல்கின்றன. அவர்களின் முன்னே எந்த தேர்வு உள்ளது?

**புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மீண்டும் நகரங்களுக்கு வருவார்களா என்று நாம் யோசிக்கிறோம். அவர்கள் ஏன் முதலில் இங்கு வந்தார்கள்?**

கணிசமான எண்ணிக்கையிலான புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மீண்டும் நகரங்களுக்கு வருவார்கள் என்று நான் நம்புகிறேன். இது நீண்ட காலம் எடுக்கும். ஆனால் கிராமங்களில் அவர்கள் வைத்திருந்த தேர்வுகளை நாம் நீண்ட காலத்திற்கு முன்பே அழித்துவிட்டோம், அவர்களை மலிவான உழைப்பாளிகள் படையாக உறுதிபடுத்தியிருக்கிறோம்

**பல மாநிலங்களில் தொழிலாளர் சட்டங்களின் முன்மொழியப்பட்ட தளர்வுகளை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?**

முதலாவதாக, இது அரசியலமைப்பையும், தற்போதுள்ள சட்டங்களையும் அவசர சட்டம் மூலம் குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாகும். இரண்டாவதாக, இது அவசர சட்டத்தின் மூலம் ஒரு பிணைக்கப்பட்ட தொழிலாளர் பிரகடனத்தை வெளியிடுவதாகும். மூன்றாவதாக, இது உண்மையில் முறைபடுத்தப்பட்ட அப்பணிபுரியும் நேரத்தை 100 ஆண்டுகளுக்கு பின்னோக்கி அமைக்கிறது. மிக அடிப்படையான விஷயம் என்னவென்றால், உலகில் தொழிலாளர் தொடர்பான ஒவ்வொரு ஒப்பந்தமும் நாளில் எட்டு மணி நேர பணியை ஏற்றுக்கொண்டுள்ளது.

குஜராத் அறிவிப்பைப் பாருங்கள். தொழிலாளர்களுக்கு கூடுதல் நேரத்துக்கு சம்பளம் வழங்கப்படாது என்று அது கூறுகிறது. ராஜஸ்தான் அரசாங்கம் கூடுதல் நேரங்களுக்கு கூடுதல் நேர ஊதியத்தை வழங்குகிறது, ஆனால் வாரத்திற்கு 24 மணிநேர வரம்புடன். அதாவது தொழிலாளர்கள் முழுமையாக ஆறு நாட்களுக்கு ஒரு நாளைக்கு 12 மணி நேரம் வேலை செய்வார்கள்.

இவை அனைத்தும் தொழிற்சாலைகள் சட்டத்தில் விதிவிலக்குகள் மற்றும் விதிவிலக்குகளை மேற்கோள் காட்டி செய்யப்பட்டுள்ளன. ஒரு தொழிலாளி வேலை செய்யக் கேட்கக்கூடிய அதிகபட்ச மணிநேரம் கூடுதல் நேரம் உட்பட 60 மணிநேரம் என்று அது கூறுகிறது. ஒரு நாளைக்கு 12 மணி நேரம் எனக் கணக்கிட்டால், இவை 72 க்கு வருகின்றன.

மிக முக்கியமாக, தொழிலாளர்கள் கூடுதல் மணிநேரம் பணி செய்ய விரும்புகிறார்களா இல்லையா என்று அவர்களால் தேர்வு செய்ய முடியாது. நீண்ட வேலை நேரம் பணிபுரிந்தால் உற்பத்தித் திறன் அதிகரிக்கும் என்று ஒரு அனுமானம் உள்ளது. ஆனால் இது வரலாற்றில் செய்யப்பட்ட பல ஆய்வுகளுக்கு எதிரானது. கடந்த நூற்றாண்டில் நிறைய தொழிற்சாலைகள் 8 மணி நேர பணியை ஏற்றுக்கொண்டன, ஏனெனில் சோர்வு மற்றும் களைப்பு காரணமாக கூடுதல் மணிநேரங்களில் உற்பத்தித்திறன் வலுவாக வீழ்ச்சி அடைவதாக அவர்களின் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அதைப் பொருட்படுத்தாமல், இது அடிப்படை மனித உரிமைகள் மீதான தாக்குதல். இது உழைப்பின் அடிமைத்தனம். மாநிலங்கள் அடிப்படையில் ஒரு ஒப்பந்தக்காரராக செயல்படுகின்றன, கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு பிணைக்கப்பட்ட தொழிலாளர்களை அவை வாங்குகின்றன. இது தலித்துகள், பழங்குடிகள் மற்றும் பெண்கள் போன்ற மிகவும் பலவீனமான பிரிவுகளை பாதிக்கும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

இந்தியாவில் தொண்ணூற்று மூன்று சதவிகித தொழிலாளர்கள் முறைசாரா துறையில் பணிபுரிவதால் அவர்கள் எப்படி செயல்படுத்த வேண்டும் என்பது பற்றிய எந்த உரிமையும் அவர்களுக்கு இல்லை. ''மீதமுள்ள ஏழு சதவிகிதத்தினரின் உரிமைகளையும் அழிப்போம்'' என்று நீங்கள் கூற முயற்சிக்கிறீர்கள். தொழிலாளர் சட்டங்களின் மாற்றத்தை கொண்டு வந்தால் முதலீடு வரும் என்று மாநிலங்கள் வாதிடுகின்றன. ஆனால் சிறந்த உள்கட்டமைப்பு, சிறந்த நிலைமைகள் மற்றும் பொதுவாக ஒரு நிலையான சமூகம் உள்ள இடங்களுக்கு மட்டுமே முதலீடு வருகிறது. உத்தரபிரதேசத்தில் ஏதேனும் இருந்திருந்தால், இந்தியா முழுவதும் அதிக எண்ணிக்கையிலான தொழிலாளர்கள் குடியேறும் மாநிலமாக அது இருந்திருக்காது.

**இந்த நடவடிக்கையின் விளைவுகள் என்னவாக இருக்கும்?**

தொழிலாளர்களின் உரிமைகளுக்கு வேட்டு வைக்கும் பாஜக கும்பல்.

உத்தரப்பிரதேசம், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்கள், அரசியலமைப்பு மற்றும் சட்ட சிக்கல்கள் காரணமாக தங்களால் மாற்றமுடியாத மூன்று அல்லது நான்கு சட்டங்களைத் தவிர்த்து, அனைத்து தொழிலாளர் சட்டங்களையும் மூன்று ஆண்டுகளுக்கு நிறுத்தி வைத்துள்ளன. நிலைமைகள் எவ்வளவு மோசமானவை என்பது முக்கியமல்ல, தொழிலாளர்கள் வேலை செய்ய வேண்டும் என்று நீங்கள் சொல்கிறீர்கள். நீங்கள் மக்களை மனிதநேயமற்றவர்களாக ஆக்குகிறீர்கள், அவர்களுக்கு காற்றோட்டம், கழிப்பறைகள் மற்றும் இடைவேளை போன்ற உரிமை இல்லை என்று கூறுகிறீர்கள். இது முதலமைச்சர்களின் அவசர சட்டம், இதன் பின்னணியில் எந்த சட்டமன்ற நடவடிக்கையும் இல்லை.

**முன்னோக்கிச் செல்ல நாம் என்ன செய்ய வேண்டும்?**

நாட்டில் தொழிலாளர் நிலைமைகளை நீங்கள் மேம்படுத்த வேண்டும். தொற்றுநோய் நம் சமூகத்தில் உள்ள மிகப்பெரிய ஏற்றத்தாழ்வுகள் காரணமாக அது செய்யும் விதத்தில் அவர்களைப் பாதிக்கிறது. பல சர்வதேச தொழிலாளர் மரபுகளை மீறுவதற்கு நாம் சாட்சியாக உள்ளோம்.

பி.ஆர்.அம்பேத்கர் இதை தெளிவாகக் கண்டார். நாங்கள் பேச வேண்டியது அரசாங்கத்தைப் பற்றியது அல்ல என்பதை அவர் புரிந்து கொண்டார். தொழிலாளர்கள் வணிகத்தின் தயவில் இருப்பது பற்றி நாம் பேச வேண்டும். அவர் கொண்டுவர உதவிய சட்டங்களை மாநிலங்கள் இடைநிறுத்துகின்றன, அதற்கான காரணங்களை அவர் முன்வைத்தார்.

**மாநில அரசுகளில் தொழிலாளர் துறை உள்ளது. அதன் பங்கு என்னவாக இருக்க வேண்டும்?**

மாநிலத்தில் தொழிலாளர் துறையின் பங்கு தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதாக இருக்க வேண்டும். ஆனால் உங்களிடம் ஒரு மத்திய அமைச்சர் இருக்கிறார், அவர் நிறுவனங்களுக்கு செவிசாய்க்கும்படி தொழிலாளர்களிடம் வேண்டுகோள் விடுக்கிறார். நீங்கள் ஏதாவது மாற்ற வேண்டும் என்றால், உங்கள் சமூக ஒப்பந்தத்தை மாற்ற வேண்டும். கிரகத்தின் மிகவும் சமத்துவமற்ற சமூகங்களில் ஒன்றுடன் நீங்கள் உரையாற்ற முடியாவிட்டால், அதைப் பற்றி நீங்கள் எதுவும் செய்ய முடியாது. இது மிக விரைவாக, மோசமான நிலைமைக்கு இட்டுச் செல்லும்..

**வீடு திரும்பும் தொழிலாளர்களில் பெரும்பாலோர் இளைஞர்கள், கோபமுள்ளவர்கள். நாம் எரிமலையில் அமர்ந்திருக்கிறோமா?**

எரிமலை வெடிக்கிறது. நாம் அதைப் பார்க்க முயற்சிக்கிறோம். அரசாங்கங்கள், ஊடகங்கள், தொழிற்சாலை உரிமையாளர்கள் மற்றும் நம்மை ஒரு சமூகமாக, அதில் உள்ள பாசாங்குத்தனத்தை பாருங்கள்.

மார்ச் 26 வரை, புலம்பெயர்ந்த தொழிலாளியைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. திடீரென்று, மில்லியன் கணக்கானவர்களை தெருக்களில் காண்கிறோம். நாம் நமது சேவைகளை இழந்து விட்டதால் அதை உணர்கிறோம். மார்ச் 26 வரை நாங்கள் செய்ய வில்லை. அவர்களை சம உரிமை கொண்ட மனிதர்களாக நாம் கருதவில்லை.

ஒரு பழமொழி உண்டு: ஏழைகள் கல்வியறிவு பெறும்போது, பணக்காரர்கள் தங்கள் பல்லக்கு தூக்கிகளை இழக்கிறார்கள். திடீரென்று, நாம் பல்லக்கு தூக்கிகளை இழந்தோம்.

**இடம்பெயர்வு குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளை எவ்வாறு பாதிக்கிறது?**

இது குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பேரழிவை ஏற்படுத்துகிறது. ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக, பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் தான் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். அவர்கள் சுகாதார அடிப்படையில் நம்பமுடியாத அளவுக்கு பாதிக்கப்படக் கூடியவர்களாக உள்ளார். இளம் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அரிதாகவே பேசப்படுகின்றன. நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில் மில்லியன் கணக்கான சிறுமிகளுக்கு இலவச சுகாதார நாப்கின்கள் வழங்க உரிமை உண்டு திடீரென்று பள்ளிகள் மூடப்பட்டுள்ளன, மாற்று வழிகள் எதுவும் வழங்கப்பட வில்லை. எனவே மில்லியன் கணக்கானவர்கள் சுகாதாரமற்ற மாற்றுகளுக்குத் திரும்புகின்றனர்.

**வீடு திரும்பும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் என்னென்ன?**

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பெரும்பாலும் நீண்ட தூரம் நடந்து வந்திருக்கிறார்கள். உதாரணமாக, புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் தங்கள் தொழிற்சாலை அல்லது குஜராத்தில் உள்ள நடுத்தர வர்க்க முதலாளிகளிடமிருந்து தெற்கு ராஜஸ்தானுக்கு திரும்பிச் செல்கின்றனர். ஆனால் அவர்கள் அதை வெவ்வேறு சூழ்நிலைகளில் செய்தார்கள்.

அவர்கள் 40 கிலோமீட்டர் தூரம் நடந்து, ஒரு தபா அல்லது ஒரு தேநீர் கடையில் நிறுத்தி, அங்கே வேலை செய்கிறார்கள், பதிலுக்கு ஒரு உணவைப் பெறுகிறார்கள். காலையில், அவர்கள் புறப்படுவார்கள். அடுத்த பெரிய பேருந்து நிலையம் அங்கேயும் அவர்கள் அப்படியே செய்கிறார்கள். அவர்கள் வீட்டிற்கு திரும்பி வருவது அப்படித்தான். அந்த இடங்கள் அனைத்தும் மூடப்பட்டதால், அவர்கள் நீரிழப்பு மற்றும் பசி, வயிற்றுப்போக்கு மற்றும் பிற நோய்களுக்கு ஆளாகின்றனர்.

**அவர்களின் நிலையை மேம்படுத்த எதிர்காலத்தில் நாம் என்ன செய்ய வேண்டும்?**

நாம் தேர்ந்தெடுத்த வளர்ச்சியின் பாதையை ஒரு முழுமையான நீக்குதல் மற்றும் உடைத்தல் மற்றும் சமத்துவமின்மை மீதான பாரிய தாக்குதலை செய்ய வேண்டும். புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் துன்பங்கள் அவர்களின் சமத்துவமற்ற சூழ்நிலையிலிருந்து எழுகின்றன.

உங்கள் அரசியலமைப்பில் உட்பொதிக்கப்பட்ட ''அனைவருக்கும் நீதி: சமூக, பொருளாதார மற்றும் அரசியல்'' என்ற முக்கியத்துவத்தை உணராமல் நீங்கள் அதை செய்ய முடியாது. சமூக மற்றும் பொருளாதார அரசியல் முன் ஒரு விபத்து அல்ல. அதை எழுதியவர்களில் எதற்கு முன்னுரிமை என்பது பற்றிய தெளிவான உணர்வு இருந்தது என்று நான் நினைக்கிறேன். உங்கள் அரசியலமைப்பு உங்களுக்கு வழி சொல்கிறது.

இந்திய உயரடுக்கும் அரசாங்கமும் வழக்கம் போல் நாம் மீண்டும் வழக்கமான வணிகத்திற்கு செல்ல முடியும் என்று நினைக்கிறோம், அந்த நம்பிக்கை நம்பமுடியாத அடக்குமுறை, அழுத்தம் மற்றும் வன்முறைக்கு வழிவகுக்கும்.

# இயக்கச் செய்திகள் கொரோனா நிவாரணப் பொருட்கள் வழங்களின் மாவட்டங்களின் பங்களிப்புகள்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் சாலூர்–இராமாபுரம், நரப்பாக்கம்,நாவலூர் – தத்தலூர் ஆகிய மூன்று கிராம இருளர் குடியிருப்பு பகுதியில் நிவாரண உதவிகள் அணுபுரம், கல்பாக்கம், திருக்கழுக்குன்றம் கிளைகள் சார்பில் 50 குடும்பங்களுக்கு மளிகை பொருட்கள் மற்றும் அரிசி ஆகின வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில்அணுபுரம் கிளை சார்பில் Dr.மனோகரன், ரமேஷ் கிளை பொருளாளர், கல்பாக்கம் கிளை சார்பில் ஜெயவேலு மாவட்ட துணைத் தலைவர், திருக்கழுக்குன்றம் கிளை சார்பில் அரவிந்த் குமார் கிளைச் செயலாளர், சுந்தர் இணைச்செயலாளர், பொன்னரசன் ஆகியோருடன் மாவட்டச் செயலாளர் ஆ.குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



**ஒசூர்** கடவுள் நகரில் ஒசூர் தாசில்தார் திரு வெங்கடேசன் முன்னிலையில் இரண்டாம் கட்டமாக 32 குடும்பங்களுக்கும், ஜூஜூவாடியில் டெம்போ ஒட்டுநர் 15 குடும்பங்களுக்கும், ஒசூர் எழில் நகரில் இன்று 25.04.2020 இரவு 7 மணிக்கு 60 குடும்பங்களுக்கும் மளிகை பொருட்கள் வழங்கப்பட்டன.



தமுஎகச மாநில பொதுச்செயலாளர் ஆதவன் தீட்சணயா அவர்கள் நமக்களித்த தகவலின் அடிப்படையில், ஊரடங்கால் பாதிக்கப்பட்ட BSNL காண்டிராக்கட் தொழிலாளர்களுக்கு முதல் கட்டமாக 30 தொழிலாளர்களுக்கு மளிகை பொருட்கள் வழங்கப்பட்டன.

ஒசூர் மத்திகிரி குதிரைபாளையத்தில் நிழல் அறக்கட்டளை சார்பாக 50 குடும்பங்களுக்கு மளிகை பொருட்கள் வழங்கப்பட்டன.

**மதுரை** மாவட்டத்தில் தீபம் குழுக்களின் 125 குடும்பங்களுக்கான நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டது (உதவி: எஸ்.என். கல்லூரி பேராசிரியர்கள், ஆசிரியர்கள்) திருமங்கலம் கிளை சார்பாக தூய்மைப் பணியாளர்கள், இரவு



நேரக் காவலகள் என 1500 பேருக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. ஹோமியோபதி மருத்துவமனையுடன் இணைந்து 10,000 குடும்பங்களுக்கு ஹெர்பல் மாத்திரைகள் மற்றும் கபசுர குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

**கோவை** மாவட்டம் மேட்டுப்பாளையம் பாரதி நகர் பகுதியில்



உணவுக்கு பிரச்சனையான குடும்பங்களுக்கு உணவுப்பொருள் வழங்கப்பட்டது

**வேலூர்** மாவட்டம திருப்பத்தூர் சார்பில் விழியிழந்த



மாற்று திறனாளிகள்.25 நபர்களுக்கு சுள 6000 (5ழூட்டை அரிசி+ காய்கறிதொகுப்பும்) அரசு மருத்துவமனை பிச்சனூர்





சுள 500 மதிப்புள்ள Mask, Sanitary & etc மாவட்ட பொருப்பாளர் P.அச்சுதன்.HM அவர்களால் வழங்கப்பட்டது.

**விழுப்புரம்** மாவட்டம், வானூர் வட்டத்தில், கிளியனூர் ஊராட்சி மன்ற துப்புரவு பணியாளர்கள் சேவையை சிறப்பாக செய்ய அவர்களுக்கு சேனிடைசர்–1, முககவசம்–2 இன்று 24.04.2020 வழங்கி அவர்களின் பணியை பாராட்டியக் காட்சி.

விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், கிளியனூர்



கிராமத்தில் அரிசி வழங்கப்பட்டது.

**நீலகிரி** மாவட்டம் நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட துப்புரவு பணியாளர்கள் 40 பேருக்கும் கூடலூர் S S நகரில் 8 குடும்பங்களுக்கு தலா 1000 ரூபாய் மதிப்புள்ள மளிகை பொருட்கள் மற்றும் காய்கறிகள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் பசுமை மீட்பு குழு தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில் கொடுக்கப்பட்டது.

## பொதுச்செயலாளர் மடல்...



அன்பு நண்பர்களுக்கு வணக்கம்.

உலகமே ஊர் அடங்கில் முடங்கிக் ம் காலத்திலும்,அறிவியல் இயக்க ஆர்வலர்கள் களத்தில பலவேறு பணிகளை செய்து வருகின்றனர்.

அனைவருக்கும் மாநிலக் குழுவின் சார்பாக பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

கொரோனா ஊரடங்கு காலத்தில் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மூலம் செய்யப்பட்ட பணிகளின் தொகுப்பு :

1. AIPSN கேட்டுக் கொண்டதின் அடிப்படையில் வடமாநிலங்களில் இருந்து தமிழகத்திற்கு புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு ஈரோடு, திருப்பூர், கோவை, ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களில் வேண்டிய உதவிகள் செய்து தரப்பட்டது.

2. அவ்வப்போது நடைபெறுகிற நிகழ்வை அடிப்படையாகக் கொண்டு, மக்களின் தேவைகளுக்கு ஏற்ப தமிழக முதல்வருக்கு மூன்று முறை கோரிக்கை மனுக்கள் அனுப்பப்பட்டுள்ளன.

பத்தாம் வகுப்பு தேர்வு நடத்தக்கூடாது என்றும், கல்விக்கான நிபுணர் குழுவை அமைத்து அந்த குழுவின் ஆலோசனையின் பெயரில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சிகளுக்கும் செய்திகள் தரப்பட்டது. பத்திரிகைகளிலும் செய்திகள் வெளியிடப்பட்டன.

4. ஜூம் செயலி மூலம் உலகப் புத்தக நாள், உலகத் தொழிலாளர் தினம, கொரோனா விழிப்புணர்வு கருத்துரை, குடும்ப ஊர் அடங்கில் பெண்களும் குழந்தைகளும், இசை சங்கமம், புத்தக அறிமுகங்கள், தேர்வு குறித்து மாணவர்களின் மன அழுத்தமும் பெற்றோர்களின் மன நிலையும், குழந்தைகளுக்குக் கதை சொல்லும் நிகழ்வுகள், எளிய அறிவியல் பரிசோதனைகள், ஒரிகாமி... என 15க்கும் மேற்பட்ட நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பேரா.பொ. ராஜமாணிக்கம், டாக்டர். சுந்தரராமன், முனைவர். ராமானுஜம், முனைவர் த.வி.வெங்கடேஸ்வரன், திரு.தாமஸ் பிராங்கோ, பேரா.ந.மணி, முனைவர். தினகரன், கல்வியாளர்கள் ஜே. கிருஷ்ணமூர்த்தி, ஆயிஷா நடராஜன், எழுத்தாளர்.சா. தமிழ்ச் செல்வன் போன்ற பல வல்லுநர்கள் கலந்துகொண்டு கருத்துரையாற்றினர்.

5. ஜூம் வழியாக மாநில நிர்வாகக் குழுக்கூட்டம், மாவட்டச் செயலாளர்கள் கூட்டம், உப குழுக் கூட்டம், மாவட்ட நிர்வாகக்குழு, செயற்குழு கூட்டங்கள்... என தினசரி ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு நடந்து கொண்டிருக்கிறது.

6. தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மற்றும் மக்கள் நல்வாழ்வு இயக்கம் சார்பாக. கொரோனா குறித்து நூற்றுக்கும் மேற்பட்ட போஸ்டர்கள் தயாரிக்கப்பட்டு வாட்ஸ்அப், முகநூல் போன்றவைகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

7. அறிவியல் இயக்கத்தின் தொண்டர்கள் சில மாவட்டங்களில் கொரோனா விழிப்புணர்வு மற்றும் சேவைப் பணியில் அரசோடு இணைந்து செயல்பட்டு வருகிறார்கள்.

8. JSA/AIPSN அனுப்பும் தகவல்களும் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு சுகாதார குழு மூலம் பகிரப்படுகிறது.

9. மாநிலம் முழுவதும் கொரொனா நிவாரணப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

**10.இதுவரையில் நடைபெற்ற நிவாரண பணிகளில் தொகுப்பு :**

இதுவரையில் கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் தமிழ்நாட்டிலுள்ள 37 மாவட்டங்களில் இன்று வரை கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் 22 மாவட்டங்களில் நிவாரண பணிகள் நடந்துள்ளன. நடைபெற்றும் வருகின்றன.

11. இவற்றில் பல மாவட்டங்களில் நடைபெற்ற நிவாரண பணிகளின் தொகுப்பு இங்கே கொடுக்கப்படுகிறது.

1.நிவாரண பணிகள் நடைபெற்ற மாவட்டங்களின் எண்ணிக்கை 22

2. நிவாரண பணிகள் நடைபெற்ற பகுதிகளின் எண்ணிக்கை 121.

3. பயனடைந்த மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை – 7900.

4. நிவாரண அளிக்கப்பட்ட பொருட்களின் மொத்த தொகை : ரூபாய் 40 லட்சத்து 32 ஆயிரத்து 195.

மேலும் எதிர்வரும் காலங்களில் நாம் பல்வேறு பணிகளை திட்டமிட்டு செயல்பட வேண்டியுள்ளது.

அனைத்து பணிகளிலும் அறிவியல் இயக்க ஆர்வலர்கள் பங்கேற்று நமது சமூக கடமையை தொடர்ந்து செய்ய வேண்டும் என மாநில குழுவின் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்

நன்றி.



அன்புடன்,
எஸ். சுப்ரமணி
மாநில பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு அறிவியல் இயக்கம்.

# கோவிட் 19: கொரோனா வைரஸின் தோற்றம் சீனாவா... அதற்கு வெளியேவா?

## அதன் மரபணு வரிசை காட்டிக் கொடுத்து விடும்.

பேரா.பி.இராஜமாணிக்கம்,

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கொரோனா வைரஸை, சைனா வைரஸ் எனக் குறிப்பிட்டு அடிக்கடிப் பேசி வந்தார். இது ஒரு இனவெறி சார்ந்தது என்றும் சைனாவுக்கு எதிரான பிரச்சாரம் என்றும் பல நாடுகள் சொன்னாலும் அதை அவர் விடாமல் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார்.

அதே போல் இங்கிலாந்து நாட்டுப் பிரதம மந்திரி போரிஸ் ஜான்சன் கொரோனா வைரஸ் பாதிப்பிற்காக சைனா 351 பில்லியன் பவுண்ட் ஸ்டெர்லிங் இழப்பீடு தரவேண்டுமென எச்சரித்துள்ளார். அதற்கு மேலும் ஒரு படிபோய் அவ்வாறு தராவிட்டால் நீதிமன்றம் சென்று சைனாவின் சொத்துக்களை கைப்பற்றுவோம் எனவும் பெய்ஜங்கிற்குத் தரவேண்டிய கடனை திருப்பிச் செலுத்த மாட்டோம் எனவும் எச்சரித்துள்ளார்.

இந்த நிலையில் கோவிட்19 சைனா வைரஸ் என்றும், வூகான் வைரஸ் என்றும் அமெரிக்க ஜனாதிபதி அழைத்து சர்வதேச அரசியல் பண்ணி வரும் சூழலில் சைனா, வைரஸின் தோற்றத்தை தோண்டி எடுக்க ஆரம்பித்துள்ளது. இந்த ஆய்வின் விபரம் மிக விரைவில் பொது வெளிக்கு வர உள்ளது. கடந்த வாரம் மாஸ்கோவிற்கான தூதுவர் ஷாங் கன்குயி கோவிட்1 9யின் முழுக் கதையும் விரைவில் வெளிவர உள்ளது. அதில் உலகத்திற்கு நிறைய ஆச்சரியங்கள் காத்திருக்கின்றன என்கிறார்.

ஐந்து மிகச் சிறந்த அறிவியல் நிறுவனங்கள் நான்கு கண்டங்களின் பன்னிரெண்டு நாடுகளில் இருந்து கோவிட்19 வைரசின் 93 மரபணுத் தொகுதிகளை சர்வதேச தகவல் களஞ்சியத்தில் இருந்து சேகரித்து வைத்துள்ளனர்.

அந்த ஆய்வுகளின்படி கோவிட்19 வைரசின் மூதாதையர் வைரஸ் எம். வி1 என்றும் அது எச்13 எச்38 மரபணுத் தொகுதியாக பரிணாமம் அடைந்துள்ளது. இந்த இரண்டு மரபணுத் தொகுதி களும் அந்த தாயிடம் இருந்து உருவாகியுள்ளது.

இதன் பின்னர் எச் 13 எச் 38 மரபணுத் தொகுதி இரண்டாம் தலைமுறையில் எச்3 என்ற மரபணுத் தொகுதியாக மாறியுள்ளது. அந்த மரபணுத் தொகுதியே எச்1 ஆகப் பரிணமித்து கோவிட்19 நோய்க்கான சார்ஸ் கோ2 வாக மாறியுள்ளது. அதாவது கோவிட்19 பெற்றோர் எச்3 அதன் பாட்டனார் எச்13 & எச்38 அதன் முப்பாட்டனார் எம் வி1 ஆவர்.

எச்1 மரபணுத் தொகுதியைக் கொண்ட கோவிட் 19 நோயின் வைரஸ் வூகான் கடல் உணவு மார்க்கெட்டில் தோன்றியது என்றாலும் அதனுடைய பெற்றோர் எச்3 ஊகானில் கண்டுபிடித்தாலும் அந்த கடலுணவு மார்க்கெட்டில் கண்டறியப்பட வில்லை... மிக முக்கியமாக கோவிட் 19 நோயின் பாட்டனார்கள் எச் 13 & எச்38 ஊகான் ஏரியாவிலேயே கண்டறியப் படவில்லை.



இதன் மூலம் தெரிந்து கொள்வது என்ன வென்றால் எச்1 வைரஸ் யாரோ ஒரு அதன் நோயாளி மூலம் கொண்டு வந்திருக்க வேண்டும். அதுவே தொற்று நோயை இங்கு உருவாக்கி இருக்கிறது. மரபணுத் தொகுதி பொய் சொல்லாது. கோவிட் 19 பரவியது எப்படி எனத் தேடிப் பார்த்தல் எது எந்தத் திசை நோக்கியும் செல்லும். இன்றைய நிலவரப்படி அது ஊகானில் தோன்றினாலும் அதன் உண்மையான தோற்றம் எங்கு என்று தீர்மானிக்க வேண்டியுள்ளது.

இருப்பினும் இதன் தோற்றம் குறித்த குறியீடுகள் குறித்து சீனத்தூதுவர் ஷாங் குறிப்பிடுவது என்னவென்றால் :

ஹவாயில் ஒரு ஜப்பான் தம்பதிகளுக்கு கோவிட்19 தொற்று ஜனவரி 28 முதல் பிப் 3க்குள் ஏற்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் சீனாவிற்கு வந்ததில்லை. மேலும் சைனாவில் வந்தவர்களோடு தொடர்பும் இல்லை. குறிப்பாக கணவனுக்கு பிப் 3 அன்று கோவிட்19 நோய் அறிகுறிகள் தோன்றியுள்ளன. கோவிட்19 நோய் ஜனவரி 1ல் வட இத்தாலியின் லம்பார்டி நகரில் வந்ததாக அங்குள்ள மீடியாக்கள் கூறின. இத்தாலியின் தலை சிறந்த மருத்துவர் கிஸ்ஸிப்பி ரெமுஸ்ஸி என்பார் சைனாவில் பரவுவதற்கு முன்னர் இத்தாயில் பரவ ஆரம்பித்து விட்டது என்கிறார்.

கடந்த குளிர்காலத்தில் 80000 மேல் ப்ளூ நோயில் அமெரிக்காவில் இறந்திருக்கின்றனர். இது கோவிட்19 நோயினால் ஏற்பட்டிருக்கும் என அமரிக்கன் வைரஸ் நிபுணரும் நோய்த்தடுப்பு கட்டுப்பாட்டு மையத்தின் இயக்குநருமான ராபர்ட் ரெட்பீல்டு ஊகித்துள்ளார். ஆனால் அமெரிக்கா அதனைச் சோதனை செய்யாமல் விட்டுவிட்டது. இதற்கு மேலாக இத்தாலியில் கோவிட்19 பரவ ஆரம்பித்ததும் அமெரிக்காவில் ப்ளூவால் பாதிக்கப் பட்டு இறந்தவர்களைப் பரிசோதிக்க விரும்பி அனுமதி கோரியதால் அமெரிக்கா அதை நிராகரித்து விட்டது.

இருப்பினும் தற்போதைய அறிவியல் தொழில் நுட்பம் கோவிட்19 தோற்றத்தையும் அதன் பாதையையும் தற்போது மறைந்தும் ஒளிந்தும் உள்ள உண்மைகள் நிச்சயமாகக் கண்டறிய முடியும் என்கிறார் சீனத் தூதுவர் ஷாங்.

ஷாங்கின் நேர்காணல் ரஷ்யா டாஸ்ஸில் வந்ததில் இருந்து சீனாவைக் கடுமையாகத் தாக்கி வந்த ட்ரம்ப் கடந்த மீடியா சந்திப்பில் வாயை அடக்கி வாசித்து இருக்கிறார். நீங்கள் சைனா மீது கோபமாக இருக்கிறீர்களா எனக் கேட்டதற்கு "ஆம்" ஆனால் அது அரசினால் கட்டுப்படுத்த முடியாமல் போனதா அல்லது வேண்டுமென்றே செய்யப்பட்டதா என்பதைப் பொறுத்தது எனறார். இரண்டுக்கும் வித்தியாசம் உள்ளது. இருப்பினும் எங்களை நோய் எதிர்ப்பிற்காக முன்னமே அனுமதித்திருக்க வேண்டும். ஆனால் அதை அவர்கள் விரும்பவில்லை. எனவே அவர்கள் இதனால் வெட்கப்பட்டு நிற்கிறார்கள். இது தவறானதென்று அவர்களுக்குத் தெரியும் அதனால் அவர்கள் வெட்கி நிற்கிறார்கள். தற்போது ட்ரம்ப் சைனா மீது முழுமையாக குற்றம் சுமத்தவில்லை. சீனா மீதான குற்றத்தை அது முடித்து வைக்க வில்லை. இருப்பினும் அது பரிமாற்றத்திற்குரியது எனத் தெரிகிறது. இந்த ட்ரம்பின் பேச்சு



என்பது சீனத் தூதுவர் ஷாங் நேர்காணல் வந்த பின் வெளி வந்துள்ளது.

சீனத் தூதுவர் கோவிட் 19ன் மூலவேரைத் தேடி அறிவியல் ரீதியாக நிரூபிப்போம் என கூறியிருக்கிறார். கோவிட்19 நோயின் வைரஸ் தாத்தா பாட்டி, பாட்டன், பூட்டி அமெரிக்காவின் தாயகமாக இருந்தால் ட்ரம்ப் மிகப் பெரும் பிரச்சினையில் சிக்கிக் கொள்ளப் போகிறார்...

அமெரிக்காவில் முதன் முதலாக 2020 பிப்29 அன்று முதல் கொரோனா சாவு நடைபெற்றது என அறிவிக்கப்பட்டது. ஆனால் அதற்கு முன்னரே இருவர் இறந்து போனது கொரானாவால் தான் என பல மாதங்களுக்கு பின்னர் தான் கண்டுபிடிக்கப் பட்டது

ஆனால் பிப் 6ல் சிலிகன் வேலியில் 57 வயதான பேட்ரீசியா தௌட் என்ற பெண் ஆடிட்டர் இறந்திருக்கிறார். அதற்கு ப்ளூ இல்லை யென்றார்கள்... கொரானாவும் இல்லையென்றார்கள். இதய நோயால் இறந்திருப்பார் என முடித்து வைத்தார்கள். ஆனால் அதன் பின்னர் திசுக்களின் பகுதிகளை எடுத்துச் சோதனை செய்த போது அது கொரோனா என நிரூபிக்கப்பட்டது. எனவே முதல் கொரானா சாவிற்கு முன்னரே கொரானா சாவும் அதன் தொற்றும் ஜனவரி மாதத்திற்குப் போய் நின்றது.

இறந்த பெண்மணி வெளிநாட்டிற்குச் செல்ல வில்லை. முதல் முதலாக அமெரிக்க அரசால் அறிவிக்கப்பட்ட சாவிற்கு முன்னர் இது நடந்திருக்கிறது. எனவே இது சமூகப் பரவலாக நடந்திருக்கிறது. மேலும் பிப்.17 அன்று சாந்தா கிளாராவில் நடந்த ஒரு சாவும் கொரோனாவே காரணம் எனத் தெரிய வந்துள்ளது. இந்த சாவுகள் பெரும் ஐஸ் பாறையின் மேல் பகுதி மட்டுந்தான் என்கின்றார் டாக்டர் சாரா கோடி. (www.nytimes.com Santa Clara County: First Known US Coronavirus Death Occurred on Feb. 6)

கோவிட்19 மூலம் எது என்று இன்றும் கண்டறியப்படவில்லை. அதன் மூலம் பல இடங்களுக்குச் செல்கிறது. அது எந்த இடத்தில் தோன்றியது என்பதைக் கண்டுபிடிப்பது அந்த நாட்டை காட்டிக் கொடுத்து அவமானப்படுத்து வதற்காக இல்லை. ஆனால் அதனுடைய பரிணாமத்தையும் அதனை முழுமையாகத் தோற்கடிப்பது தான் உண்மையான நோக்கம் என்கிறார். வூகானில் தான் முதன்முதலில் நாவல் கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப் பட்டாலும் அதன் மூலாதாரம் அங்குதான் உருவானது என ஆதாரங்கள் கிடையாது.

இன்றைய சூழலில் யாரும் பாதுகாப்பாக இல்லை. எனவே ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டிக் கொண்டு இருப்பதைவிட எல்லோரும் இணைந்து செயல்பட வேண்டும். இனவெறியும் பழைய "மறைமுக யுத்த" சிந்தனையும் தற்போதைய தொற்றுநோய்கு எந்த விதத் தீர்வும் தராது. ஆனால் உலகத்தை இருளில் நோக்கித் தள்ளும். இன்றைய உலகத் தொற்று நோய் சூழலில் நாடுகளுக்கு இடையில் எல்லைகள் இல்லை. ஒரே சமூகமாய் மாறியிருக்கிறோம். இந்த சமூகத்தின் முன் இருப்பது ஒரே இலக்கு தான்.

மூலம்: M.K. Bhadrakumar 22 Apr 2020 நியூஸ் கிளிக். https://www.newsclick.in/COVID-19-China-Wuhan-Coronavirus

# வரலாறு மீண்டும் திரும்புகிறது
## History repeats itself

**சிதம்பரம் இரவிச்சந்திரன்**

வரலாறு மீண்டும் திரும்புகிறது (history repeats itself) என்பது ஒரு சொல்வழக்கு. கோவிட்19 கொள்ளை நோய், வரலாற்றில் இதற்கு முன் தோன்றிய கொள்ளைநோய்கள் பற்றிய பேச்சுக்களை இப்போது கிளப்பிவிட்டுள்ளது. காலம் மாறினாலும், அவ்வாறு உலகை அச்சுறுத்திய கொள்ளை நோய்களுக்கும், கோவிட்19 தொற்றிற்கும் ஆச்சரியமான நெருங்கிய ஒற்றுமைகள் காணப்படுகின்றன. கோவிட்19 நோய்க்கும், 4 கோடி பேரின் உயிரை முன்பு குடித்த ஸ்பானிஷ் புளூவிற்கும் இடையில், இந்த ஒற்றுமை அதிகமாக இருக்கிறது.

ஆனால், வரலாறை நாம் மறப்பதைப் போலவே, அக்காலத்தில் ஏற்பட்ட இந்தக் கொள்ளைநோய்கள் நமக்குக் கற்றுத்தந்த பாடங்களையும் நாம் மறந்துவிட்டோம். இவ்வாறு இன்று அதிகம் பேசப்படும் நான்கு கொள்ளைநோய்கள் 2009 ஸ்வைன் புளூ/ பன்றிக் காய்ச்சல், 1968 ஹாங்காங் புளூ, 1957–58 ஆசியப் புளூ மற்றும் 1918–20 ஸ்பானிஷ் புளூ. 2012–13ல் ஏற்பட்ட மெர்ஸ்2012 ஒரு கொள்ளைநோயாக அறிவிக்கப்படவில்லை. இந்தக் கொள்ளை நோய்கள் அனைத்தும் ஒருவிதத்தில் ஒத்துள்ளன. இவை பொதுவாக, இன்புளுயன்சா தொற்றால் தோன்றியவை.

உலகை இப்போது அச்சுறுத்திவரும் கோவிட்19 தொற்றே இதற்கு முன் தோன்றிய கொள்ளைநோய்கள் எல்லாவற்றையும் விடக் குறைவான இறப்பு விகிதத்தைக் கொண்டுள்ளது. ஸ்பானிஷ் புளூ நோயே கொள்ளைநோய்களில் வரலாற்றில் இதுவரை அதிக மனித உயிரிழப்புகளுக்குக் காரணமாக இருந்துள்ளது. உலக மக்களால் அதிகம் பேசப்பட்ட கொள்ளைநோயும் இதுதான். இந்நோய் உலகம் முழுவதும், 4 முதல் 5 கோடி பேரின் உயிரைக் குடித்தது.

காலப்போக்கில் மறக்கப்படாதவரை, உலகில் தோன்றும் ஒவ்வொரு கொள்ளைநோய் ஏற்படுத்தும் பெருந்துயரமும், மனிதனுக்கு ஒரு பாடம். இவை வருங்காலத்தில் உருவாகக்கூடிய பெரும் தொற்றுநோய்களை எதிர்கொள்வதற்கு அவனுக்குக் கற்றுக்கொடுக்கிறது. ஸ்பானிஷ் புளூ நோயும், கோவிட்19 நோயும் ஒரே மாதிரியான பாடங்களைக் கற்றுக்கொடுக்கின்றன. கோவிட்19 போல, ஸ்பானிஷ் புளூவிற்கும் மருந்து இல்லை. அப்போது, மருத்துவ உலகம் மழலைப்பருவத்தில் இருந்தது.

அதனால், ஸ்பானிஷ் புளூவைக் கட்டுப்படுத்துவதற்கானத் தடுப்பூசி மருந்து என்ற பேச்சிற்கே இடமில்லை. புளூவிற்கு எதிரான முதல் தடுப்பூசி மருந்து 1940ல்தான் நடைமுறைக்கு வந்தது. முதல் பாக்டீரியா எதிர் மருந்து 1928ல் கண்டுபிடிக்கப்பட்டது. அதற்குள், ஸ்பானிஷ் புளூ கோடிக்கணக்கான மக்களின் உயிரைக் காவு கொண்டுவிட்டது. அப்போதும், சமூக விலகல், பொது முடக்கம், முகக்கவசங்கள் ஆகியவையே, ஸ்பானிஷ் புளூவின் பேரழிவில்

**விஞ்ஞானச் சிறகு சந்தா செலுத்துவோர்**
கீழ்க்காணும் வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.
ஆண்டுச் சந்தா ரூ.30 ஆயுள் சந்தா ரூ.300
வங்கிக் கணக்கு விபரம்
**TNSF-VIGNANA SIRAGU**
**Union Bank of India**
**Madurai main branch, Madurai**

இருந்து உலகைக் குறிப்பாக, வளரும் நாடுகளைச் சேர்ந்த மக்களைக் காப்பாற்றியது.

இன்று உள்ளதைப் போலவே, அன்றும், அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் சுகாதாரப் பணியாளர்கள் ஸ்பானிஷ் தொற்று பரவாமல் தடுப்பதற்காக முகக்கவசங்களை அணிந்துகொண்டே சிகிச்சை அளித்தனர். ஒவ்வொருநாளும், பெரும் எண்ணிக்கை யிலான மக்கள் இந்தத் தொற்றால் பாதிக்கப்பட்டு, மருத்துவ மனைக்கு வந்தனர். இன்று உள்ளதைப் போல இல்லா விட்டாலும், அன்று சில அமெரிக்க நகரங்கள் பொதுமுடக்கத்தைக் கடுமையாக செயல்படுத்தின.

ஆனால், இன்று போல அன்று பொதுநிகழ்ச்சிகள் ரத்து செய்யப் படவில்லை. சமூக விலகலும் கண்டிப்புடன் அமல்படுத்தப்பட வில்லை. பிலடெல்பியா, செயிண்ட் லூயிஸ் ஆகிய இரு அமெரிக்க நகரங்களை ஒப்பிடலாம். இந்த இரு நகரங்களுமே ஸ்பானிஷ் புளூவால் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன. ஃபிலடெல்பியா வழமை போல, தன் செயல்பாடுகளை நடத்திக் கொண்டிருந்தபோது, செயிண்ட் லூயிஸ் கட்டுப்பாடுகளை விதித்தது.

ஒரு மாதகாலத்திற்குப் பிறகு, பிலடெல்பியாவில், சுமார் 10,000 பேர் நோயால் உயிரிழந்தனர். செயிண்ட் லூயிஸில், சுமார் 800 பேர் மட்டுமே இறந்தனர். வேறு பல நகரங்களிலும், தேவாலயங்கள், பள்ளிகள், திரையரங்குகள் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்கள் மூடப்பட்டன. இக்கட்டுப்பாடுகள் விதிக்கப்படாத நகரங்களைக் காட்டிலும், பொதுமுடக்கத்தையும், சமூக விலகலையும் பின்பற்றிய இடங்களில் குறைவான மரணங்களே ஏற்பட்டன.

இந்நோய்க்கான சிகிச்சையின்போது, மருத்துவர்கள் தற்செயலாக, ஒரு ஆச்சரியமான விஷயத்தைக் கண்டுபிடித்தனர். வெப்பநிலை குறைவான மருத்துவமனை அறைகள் மற்றும் நிழலான இடங்களில் இருந்த நோயாளிகளைக் காட்டிலும், நேரடி சூரிய ஒளியில் இருந்தவர்களும், திறந்தவெளியில் இருந்தவர்களும் விரைவில் குணம் அடைந்தனர்.

இப்போதும், திறந்தவெளி மற்றும் நல்ல காற்றோட்டவசதி உள்ள இடங்களில் உள்ளவர்கள் கொரோனாத் தொற்றால் மிகக் குறைவாகவே பாதிக்கப்படுவதாக நிபுணர்கள் கூறுகின்றனர். குளிர்சாதனவசதி உள்ள இடங்களில் வைத்து சிகிச்சை அளிக்கப்படும் நோயாளிகள் இந்நோயை வேகமாக மற்றவர் களுக்குப் பரப்புவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இதனால், இந்திய அரசு கொரோனா நோயாளிகளுக்குச் சிகிச்சை தரும் இடத்தில் உள்ள குளிர்சாதனவசதியை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது பற்றி வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது.

ஸ்பானிஷ் புளூ பலவிதங்களிலும், உலகின் போக்கையே மாற்றியது. வருங்காலத்திற்கான புதிய பாதையை அது வகுத்தது. கொரோனாவிற்குப் பிறகு உள்ள காலம், அதற்கு முன்பு இருந்ததைப் போல இராது என்று நிபுணர்கள் கூறிவருகின்றனர். ஸ்பானிஷ் புளூ பரவிய 1914–19 காலகட்டத்தில்தான், முதல் உலகப்போர் நடந்தது. அந்த சமயத்தில், உலகில் இருந்த ஆண் பெண் விகிதத்தை இந்தப் புளூ திடீரென்று மாற்றியது. அன்றும், இன்றும் இந்த இரண்டுப் பேரிடர்களாலும், ஆண்கள் அதிகமாக உயிரிழந்துள்ளனர்.

அன்று, இதுவே, அமெரிக்காவிலும், ஐரோப்பிய நாடுகளிலும் பெண்களை வேலை தேடி, வீட்டுக்கு வெளியே வரவழைத்தது. 1920களில், அமெரிக்காவில், பெண்கள் எல்லாத் துறைகளிலும் பணியாற்றத் தொடங்கினர். உலக நாடுகள் பலவற்றிலும், பெண்கள் இதன் பின் வேலைக்குப் போக ஆரம்பித்தனர். அமெரிக்காவில், இந்த காலகட்டம் roaring twenties என்று அழைக்கப்படுகிறது. இதன் விளைவாக, அமெரிக்கப் பொருளாதாரம் அபரிமிதமான வளர்ச்சி அடைந்தது. இதன் பிறகே, 1929 பொருளாதாரப் பெரு மந்தம் (The great dipression) ஏற்பட்டது.

ஸ்பானிஷ் புளூ உலகை பலவிதங்களிலும் மாற்றியது. முதல் உலகப் போரும், இத்தொற்றும் அப்போது உலக மக்களிடையில் ஏற்படுத்திய தாக்கத்தைப் போல, இன்றும் கொரோனாவிற்குப் பின் உலகின் நிலை குறித்து மக்கள் பேசிவருகிறார்கள். உலகின் பணக்கார நாடுகளும், ஏழை நாடுகளும் இன்று சுகாதாரச் சேவைகளை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்கின்றன. 1918–20ல் ஏற்பட்டது போல இன்று ஏற்படாது என்றாலும், கோவிட்19 தொற்றிற்குப் பின் உள்ள காலத்தில், பல மாற்றங்கள் நிகழும் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

ஸ்பானிஷ் புளூ, நாடுகளை நலவாழ்வுத் திட்டங்கள் பற்றி அதிகம் சிந்திக்க வைத்தது. சட்டப்பூர்வமான அரசின் திட்டங் களாக மக்கள் நலவாழ்வுத் திட்டங்கள் தீட்டப்பட்டு, செயல் படுத்தப்பட ஆரம்பித்தன. உலக அளவில், ஐக்கியநாடுகள் சபைக்கு முன்னோடியாகத் தோன்றிய லீக் ஆஃப் நேஷன்ஸ் கூட்டமைப்பு, 1923ல், சுகாதார நிறுவனம் என்ற அமைப்பை உருவாக்கியது. இதுவே, 1948ல் உலகச் சுகாதார நிறுவனமாக (WHO) மாறியது.

இப்போது, இந்த அமைப்பின் செயல்பாடுகள் குறித்து உலகின் பல நாடுகளும் கடுமையாக விமர்சனம் செய்து வருகின்றன. ஸ்பானிஷ் புளூ மாற்றியது போல அல்லது வேறு விதமாக கோவிட் 19 உலகின் போக்கை மாற்றி அமைக்கப்போகிறது. இரண்டு தொற்று நோய்களும் நமக்குக் கற்றுக்கொடுத்த பாடங்கள் ஏறக்குறைய ஒரே மாதிரியானவையே.

இந்த இரண்டு தொற்றுகளுக்கும், மருந்து, உலகளாவிய சிகிச்சைமுறை என்று எதுவும் கிடையாது என்பதால், முகக் கவசங்கள், பொது முடக்கம், சமூக விலகல், தூய்மை போன்றவையே நோயைக் கட்டுப்படுத்த உதவும் வழிகளாக அன்றும், இன்றும் உள்ளன. வரலாறு மீண்டு திரும்புகிறது என்பதை இந்த நோய்கள் எவ்வளவு அழகாக நமக்கு எடுத்துச்சொல்கின்றன!


**விஞ்ஞானச் சிறகு**

**பதிப்பாளர்** : ஆர்.இராமகிருஷ்ணன்
**ஆசிரியர்** : பொ.இராஜமாணிக்கம்
**இணை ஆசிரியர்:** மொ.பாண்டியராஜன்


**ஆசிரியர் குழு**

| | |
|---|---|
| முனைவர் ந. மணி | அ.அமலராஜன் |
| முனைவர் சு. தினகரன் | முனைவர் எஸ்.சேதுராமன் |
| சோ.மோகனா | தி.சாந்தி |
| எஸ்.பார்த்தசாரதி | தே.சுந்தர் |

**இதழ் வடிவமைப்பு**
**சந்தா – நிர்வாகம் – விநியோகம்**
**இல.நாராயணசாமி**


Owned by Tamil Nadu Science Forum and published by R.Ramakrishnan 6, Kakka Thoppu Street, Madurai - 625 001 and printed by G.Ramakrishnan at Vaigai Press & Publishers, 6/16, Bypass Road, Madurai - 625 018. Editor : **P.RAJAMANICKAM.**

RNI No. TNTAM/2000/4483 Regd.No.TN/MA/81/2018-20. TN/WPP/10/SR/2018-20 Date of Publication 27th. Posted at Madurai BPC. 28th &29th



**அனுப்புநர்:**

**விஞ்ஞானச் சிறகு**
தமிழ்நாடு அறிவியல் இயக்கம்
6, காக்கா தோப்புத் தெரு
**மதுரை – 625 001.** செல் : **99440 52435**
mail to : editorsiragu@gmail.com

**பெறுநர்:**